## இவற்றிற்கு உங்களுக்கு உரிமையுண்டு:

- உங்கள் உரிமைகள் பற்றிய தகவலைப் பெறவும், உங்கள் கேள்விகளுக்குப் பதில் கிடைக்கவும்
- வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உடற் பரிசோதனைக்கு
- ஒரு மனநோய் மருத்துவருடன் நேர்காணலுக்கு
- ஒருவரை நியமிக்கப்பட்ட ஆளாகச் செய்வதற்கு
- சிகிச்சை, ஆதரவு மற்றும் வெளியேறும் திட்டம்
- அஞ்சல், தொலைபேசி அல்லது மின் சாதனங்களூடாக ஆட்களுடன தொடர்பு கொள்ளல் அல்லது அவர்கள் வருகை தந்து பார்வையிடல் ( இந்த உரிமை மட்டுப்படுத்தப்படலாம்).
- தனியாய் இருத்தல், அந்தரங்கம்
- உங்கள் மருத்துவ அறிக்கைகளைப் பார்வையிடல் (இந்த உரிமை மட்டுப்படுத்தப்படலாம்).
- நீங்கள் வைத்தியசாலையில் இருக்கும்போது உங்கள் தனிப்பட்ட பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.
- இன்னொரு மன நோய் மருத்துவரிடமிருந்து மேலும் கருத்துக்கு. இதனை ஒழுங்குசெய்யுமாறு, உங்கள் மன நோய் மருத்துவரை அல்லது பிரதம மனநோய் மருத்துவரை நீங்கள் கேட்கலாம்(தொ:9222 4462)
- உளநல உதவி சேவையை நாடுவதற்கு (தொ:1800 999 057). ஒரு உள நல உதவியாளர் நீங்கள் கட்டாய நோயாளராக வந்து 7 நாட்களுக்கிடையில் தானாகவே உங்களுடன் தொடர்பு கொள்வார் (சிறுவர்களுக்கு 24 மணித்தியாலங்கள்)
- உங்களது உளநல சேவைக்கு அல்லது சுகாதார மற்றும் இயலாமை சேவைகள் முறைப்பாடுகள் காரியாலயத்திற்கு ஒரு புகாரைச் செய்ய(HaDSCO) (தொ:1800 8113 583).
- உங்கள் விடயத்தை உள நல தீர்ப்பாயத்தைக் கொண்டு மீளாய்வு செய்வதற்கு(தொ: 08 6145 3900). நீங்கள் கட்டாய நோயாளராக வந்து 5 வாரத்துக்குள் (சிறுவர்களுக்கு 10 நாட்கள்) தீர்ப்பாயம் விசாரணைக்கு நிரலிடும்.

## மேலும் தகவல்கள்

இந்தப் பிரசுரத்திலுள்ள தகவல்கள், உளநலச் சட்டம் 2014 இல் விபரிக்கப்பட்ட சட்டங்களுடன் தொடர்புடையதாகும்.

- பரிசோதனை ஒன்றிற்காக மனநோய் வைத்தியருக்குச் சிபாரிசு செய்தல்
- தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளருக்கான வழிமுறைகள்.
- சமூகச் சிகிச்சை வழிமுறைகள்
- தானாக விரும்பி வரும் நோயாளருக்கான தகவல்கள்
- மன வருத்தத்திற்கான மருத்துவத்தைப் பெறுதல்
- தனிப்பட்ட உதவியாளர்களுக்கான தகவல்கள்
- நியமிக்கப்பட்டவர்கள்: நியமனம் செய்வது எவ்வாறு அத்துடன் அதன் அர்த்தம் என்ன.

## ஏனைய பிரசுரங்கள் கிடைக்குமிடம்:

- உள நல நியாய மன்று
- உள நல ஆதரவு சேவை
- உள நல சட்ட நிலையம்

உள நல சட்டம் 2014 பற்றி அதிக தகவல்களுக்கும், ஏனைய வழி வகைகளுக்கும் வருகை தரவும், மன நல ஆணைய இணையத்தளம்: www.wa.gov.au
or phone (08) 6272 1200

This document can be made available in other languages and alternative formats on request.

Published by the Mental Health Commission (2015)

# தங்கியிருந்து சிகிச்சை பெறும் விதிமுறைகள்



**தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான விதியானது, ஒரு வைத்தியசாலையில் ஒரு கட்டாய நோயாளராக நீங்கள் சிகிச்சைபெறுவதற்கு உளநலச் சட்டம் 2014 இன் கீழான ஒரு விதியாகும்.**

**நீங்கள் தங்கியிருந்து சிகிச்சைபெறும் ஒரு நோயாளியாக விதிக்கப்பட்டிருப்பின், உங்களது உரிமைகள் என்ன அத்துடன் நீங்கள் எதனை எதிர்பார்க்கலாம் என்பது பற்றிய தகவல்களை உங்களுக்கு இந்தப் பிரசுரம் தருகிறது.**

## தங்கியிருந்து சிகிச்சைபெறும் விதிமுறை மேற்கொள்ளப்பட்டது ஏன்?

நீங்கள் தங்கியிருந்து சிகிச்சைபெறும் விதிமுறையில் (படிவம் 6ஏ அல்லது6 பி) இருக்கிறீர்களானால்,

ஒரு மனநோய் மருத்துவர் உங்களைப் பரிசோதனைசெய்து, எடுத்தமுடிவு தான் இதற்குக் காரணம் ஆகும்:

- சிகிச்சை தேவைப்படும் ஒரு மனநோய் உங்களுக்குண்டு,
- நீங்கள் சிகிச்சை பெறாதுவிட்டால், உங்களுக்கோ அல்லது இன்னொருவருக்கோ குறிப்பிடத்தக்க ஆபத்து உண்டு,
- சிகிச்சைபற்றி தீர்மானிக்கக்கூடியளவு போதிய நலம்உங்களுக்கு இல்லை,
- இந்த நிலைவரங்களின்கீழ், சமூகத்தில் சிகிச்சைபெறுவது சாத்தியமில்லை,
- தங்கியிருந்து சிகிச்சை பெறும் விதிமுறையைத் தவிர உங்களுக்குச் சிகிச்சையளிப்பதற்குக் குறைவான மட்டுப்பாடுகளுடனான வேறுவழி இல்லை.

## தங்கியிருந்து சிகிச்சை பெறும் ஏற்பாட்டினால் நீங்கள் என்ன விளங்குகிறீர்கள்?

தங்கியிருந்து சிகிச்சைபெறும் விதிமுறை என்பதனால் விளங்கிக்கொள்வது:

- விதிமுறையில் பெயர்குறிப்பிட்ட வைத்தியசாலையில் நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள்,
- வைத்தியசாலையில் நீங்கள் உங்கள் மன நோய்க்குச் சிகிச்சை பெறுவீர்கள்,
- தங்கியிருந்து சிகிச்சை பெறும் ஒழுங்குமுறை முடிவுறும் வரை நீங்கள் வைத்தியசாலையை விட்டுச்செல்ல அனுமதிக்கப்படமாட்டீர்கள்(உங்களுக்கு விடுதலை வழங்கப்பட்டால் அன்றி).

எந்த வகையான வைத்தியசாலையில் நீங்கள் அனுமதிக்கப்படுகிறீர்கள் என்பதுதான் படிவம் 6ஏ க்கும் 6பி க்கும் இடையிலான வேறுபாடு ஆகும்.

உங்கள் உடல் ஆரோக்கியம் கடுமையான ஆபத்தில் இருந்தால், அத்துடன் உங்கள் உடல் நிலைக்குச் சிகிச்சை அளிக்கக்கூடிய வைத்தியசாலையில் நீங்கள் இருக்க வேண்டுமானால் மட்டும் படிவம் 6 பி உபயோகிக்கப்படும்.

## நீங்கள் பெறும் சிகிச்சையில் ஏதாவது சொல்லக் கேட்கிறீர்களா?

சிகிச்சை வழங்கப்பட முன்னர் எப்பொழுதும் உங்களின் (உடன்படிக்கை) சம்மதம் கேட்கப்படும். எவ்வாறாயினும், ஒரு கட்டாயமான நோயாளரானால், தேவைப்படின், உங்கள் சம்மதம் இல்லாமலே உங்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படலாம். நீங்கள் பெறும் சிகிச்சை பற்றி முடிவு செய்யும்போது உங்களது சிகிச்சைக் குழு உங்கள் விருப்பங்களைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளும் அத்துடன், உங்கள் சிகிச்சை, ஆதரவு மற்றும் வெளியேற்றும் திட்டத்தை உருவாக்கும்போது நீங்களும் ஈடுபடுத்தப்படுவீர்கள்.

## வைத்தியசாலையை விட்டுச்செல்ல நீங்கள் அனுமதிக்கப்படுகிறீர்களா?

நீங்கள் கட்டாயமாகப் பூட்டிய மருத்துவ பகுதியில் காலத்தைக் கழிக்க மாட்டீர்கள், எவ்வாறாயினும், அனுமதி இல்லாமல் நீங்கள் வைத்தியசாலையை விட்டுச் செல்ல முடியாது. நீங்கள் விட்டுச் சென்றால், ஊழியர் ஒருவர், போக்குவரத்து அலுவலர் அல்லது காவலர் உங்களை மீண்டும் வைத்தியசாலைக்குக் கொண்டுவரலாம். வைத்தியசாலையிலிருந்து வெளியேற உங்கள் மனநோய் மருத்துவரை நீங்கள் கேட்கலாம். இது நீங்கள் சுகம்பெற உதவியாகவும், வைத்தியசாலையிலிருந்து வெளியே இருப்பது உங்களுக்குப் பாதுகாப்பாகவும் இருக்குமானால் மன நோய் மருத்துவர் இணங்கலாம். முதலில் அவர் உங்கள் பராமரிப்பாளர்/குடும்பத்துடன் சரிபார்க்கவேண்டும். உங்கள் விடுதலை முடிவடைந்ததும் நீங்கள் வைத்தியசாலைக்குத் திரும்ப வேண்டும். இல்லையானால், ஒரு பணிப்பாளர் உறுப்பினர், போக்குவரத்து அலுவலர் அல்லது காவலர் உங்களை வைத்தியசாலைக்குத் திரும்பவும் கூட்டிச் செல்வார்.

## எவ்வளவு காலத்திற்குத் தங்கியிருந்து சிகிச்சைபெறும் விதிமுறை நீடிக்கும்?

தங்கியிருந்து சிகிச்சைபெறும் விதிமுறை வயதானோருக்கு **21 நாட்கள்** அல்லது(18 ஆண்டுகளுக்குக் குறைவான வயதுடைய ) சிறுவர்களுக்குப் **14 நாட்கள்** வரை நீடிக்கலாம்.

அந்த விதிமுறையின் கடைசி வாரத்தில், மனநோய் மருத்துவர் மீண்டும் உங்களைப் பரிசோதித்து விதிமுறை நீடிக்கப்பட வேண்டுமா என முடிவுசெய்வார். ஒரு மன நோய் மருத்துவர், வயதானோருக்கு **3 மாதங்கள்,** சிறுவர்களுக்கு **28 நாட்கள்** வரை விதிமுறையைத் தொடரலாம். மேலும் உங்களுக்கு வைத்தியசாலையில் கட்டாய சிகிச்சை வேண்டியதில்லை யென நலம் பெறும் வரை இந்த விதிமுறை வேண்டிய தடவைகள் நீடிக்கப்படலாம்.

## தங்கியிருந்து சிகிச்சைபெறும் விதிமுறை எவ்வாறு முடிவடையும்?

நீங்கள் நோயாளராக இருக்கும் எந்த வேளையில்ம், மன நோய் மருத்துவர் பின்வருமாறு முடிவெடுக்கலாம்:

- நீங்கள் இனிமேலும் ஒரு கட்டாய நோயாளராக இருக்கவேண்டியதில்லை, அத்துடன் ஒன்றில் நீங்கள் தன்னார்வ நோயாளியாக தங்கலாம் அல்லது வைத்தியசாலையை விட்டுச் செல்லலாம், அல்லது
- ஒரு சமூகச் சிகிச்சை விதிமுறையில், நீங்கள் இப்பொழுது சமூகத்தில் சிகிச்சை பெறலாம்.

பின்வரும் சந்தர்ப்பத்தில், நீங்கள் வெளியேற்றப்பட்டு, விடுதலைபெற அனுமதிக்கப்படவேண்டும்:

- உங்களது கட்டாய சிகிச்சை விதிமுறை காலாவதியாகி அத்துடன் அது நீடிக்கப்படவில்லையானால், அல்லது
- நீங்கள் இனிமேலும் ஒரு கட்டாய நோயாளியாக வைத்தியசாலையில் இருக்க வேண்டியதில்லையென உளநல தீர்ப்பாயம் உங்கள் விடயத்தை மீளாய்வுசெய்து முடிவுசெய்தால்.